# முன்னுரையும் முகப்புரையும்
# (Introduction and Preamble)

1. இந்திய அரசியலமைப்புச் சட்டம் யாரால் தயாரிக்கப்பட்டது?

இதற்கென்றே தனியாக அமைச்சரவைத் தூதுக் குழுவின் திட்டத்தின் (Cabinet Mission Plan) அடிப் படையில் 1946இல் அமைக்கப்பட்ட அரசியலமைப்பு மன்றத்தினரால் (Constituent Assembly) தயாரிக்கப்பட்டது. இம்மன்றத்தில் 389 உறுப்பினர்கள் இருந்தனர்.

2. அரசியலமைப்பு மன்றத்தின் தலைவர் யார்?

முதன் முதலில் டாக்டர் சச்சிதானந்த சின்ஹா தற்காலிகத் தலைவராக இருந்தார். அவருக்குப் பின் டாக்டர் இராஜேந்திர பிரசாத் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஆனார்.

3. துணைத் தலைவர் யார்?

H.C. முகர்ஜி

4. அரசியலமைப்புச் சட்டத்தயாரிப்பில் டாக்டர் அம்பேத்காரின் பங்கு என்ன?

டாக்டர் அம்பேத்கார் சட்ட முன் வடிவு தயாரிக்கும் குழுவின் (Drafting Committee) தலைவராக இருந்தார்.

5. மன்றத்தின் அரசியலமைப்பு ஆலோசகர் (Constitutional Advisor) யார்?

B.N. ராவ்.

6. அரசியலமைப்புச் சட்டத்தின் குறிக்கோள் பற்றிய தீர்மானத்தை (Objectives Resolution) மன்றத்தில் கொண்டு வந்தவர் யார்?

ஜவஹர்லால் நேரு.

7. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தையாகக் கருதப் படுபவர் யார்?

டாக்டர் அம்பேத்கார்.

8. அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரிக்க அரசியலமைப்பு மன்றம் எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டது?

2 ஆண்டுகள், 11 மாதங்கள், 17 நாட்கள்.

9. உலகின் மிக நீளமான அரசியலமைப்புச் சட்டம் எந்த நாட்டைச் சார்ந்தது?

இந்தியாவைச் சார்ந்தது.

10. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எத்தனை பிரிவுகளும் (Articles) அட்டவணைகளும் (Schedules) உள்ளன?

395 பிரிவுகளும் 12 அட்டவணைகளும் உள்ளன. (அரசியலமைப்பு ஆரம்பிக்கும் பொழுது 8 அட்டவணைகள் மட்டுமே இருந்தன).

11. அரசியலமைப்புச் சட்டம் எப்போது அரசியலமைப்பு மன்றத்தால் (Constituent Assembly) ஒப்புக் கொள்ளப்பட்டது?

நவம்பர் 26, 1949.

12. எந்த நாளிலிருந்து அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது?

ஜனவரி 26, 1950.

13. அரசியலமைப்புச் சட்டம் முகப்புரை (Preamble) அரசிய லமைப்புச் சட்டத்தின் பகுதியா?

ஆம்.

14. முகப்புரை திருத்தம் செய்யப்பட்டுள்ளதா? எப்பொழுது?

1976இல் 42ஆவது திருத்தம் மூலமாக 'சமதர்ம' (Socialist) 'சமயச் சார்பற்ற' (Secular) மற்றும் 'ஒருமைப்பாடு' (Integrity) என்று மூன்று சொற்கள் சேர்க்கப்பட்டன. (3-1-77 முதல் நடை முறைக்கு வந்தது.) முகப்புரையில் ஒரே ஒருமுறை மட்டுமே திருத்தம் செய்யப்பட்டுள்ளது.



15. அரசியலமைப்புச் சட்டத்தின் உயிர்நாடி (Soul) என்றழைக்கப் படுவது எது?

முகப்புரை.

16. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சில பகுதிகள் மற்ற நாடுகளின் அரசியலமைப்புச் சட்டம் (அ) நடைமுறைகளைத் தழுவி அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றைப் பற்றிக் குறிப்பிடவும்.

a) அடிப்படை உரிமை, உச்ச நீதிமன்றம், நீதித்தீராய்வு (Judicial Review), குடியரசுத் துணைத் தலைவர் பதவி - அமெரிக்கா

b) வழிநடத்தும் கொள்கைகள் (Directive Principles) - அயர்லாந்து

c) அடிப்படைக் கடமைகள் - ஒருங்கிணைந்த சோவியத் ரஷ்யா

d) பாராளுமன்ற முறை அரசியலமைப்பு, சட்டமியற்றும் முறை, சிறப்புரிமைகள் (Privileges) - இங்கிலாந்து

e) அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் - தென் ஆப்பிரிக்கா

f) அவசர நிலை நிபந்தனைகள் - ஜெர்மனி

g) ஒருங்கிணைந்த அட்டவணை (Concurrent list) - ஆஸ்திரேலியா

h) கூட்டாட்சி முறை (Federalism) - கனடா

17. இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு மூலாதாரமாக (Source) விளங்குவது யார்?

இந்தியக் குடிமக்கள்.

18. இந்தியாவிற்குத் தனியாக ஒரு அரசியலமைப்புச் சட்டம் வேண்டுமென முதன் முதலில் கூறியவர் யார்?

M.N. ராய்

19. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் குறிப்பிடத் தக்க அம்சங்கள் யாவை?

எழுத்து வடிவமான அரசியலமைப்புச் சட்டம், சுய ஆதிக்கம் உடைய ஜனநாயகக் குடியரசு, பாராளுமன்ற முறை அரசாங்கம், கூட்டாட்சி முறையும் ஒருமைத் தன்மையும் நிறைந்த அரசியல் சட்டமைப்பு, உறுதித் தன்மை (rigidity)யும், நெகிழ்ச்சித் தன்மை (flexibility)யும் கொண்ட சட்டமைப்பு, அடிப்படை கடமைகள், நீதித் துறையின் சுதந்திரத் தன்மை, மதச் சார்பற்ற அரசியலமைப்பு, ஒற்றைக் குடியுரிமை, வேறுபாடின்றி வயது வந்தோர் அனைவருக்கும் ஓட்டுரிமை, அனைத்திந்தியப் பணிகள் போன்றவை.

# பகுதி - 1

## யூனியனும் அதன் நிலப் பகுதிகளும்
## (The Union and its Territories)

(பிரிவுகள் 1- 4)

1. அரசியலமைப்புச் சட்டத்தில் நமது நாட்டின் பெயர் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

இந்தியா, அதாவது பாரதம், பல மாநிலங்களின் ஒன்றியமாகும். (Union of States) - *(பிரிவு - 1)*

2. ஏற்கெனவே இருக்கும் பகுதிகளிலிருந்து புதிதாக ஒரு மாநிலத்தை ஏற்படுத்தவோ, ஏற்கெனவே இருக்கும் மாநிலத்தின் பரப்பைக் கூட்டக் குறைக்கவோ, எல்லைகளை மாற்றவோ மாநிலத்தின் பெயரை மாற்றவோ யாருக்கு அதிகாரம் உண்டு?

குறிப்பிட்ட மாநிலங்களோடு கலந்தாலோசித்து குடியரசுத் தலைவரின் பரிந்துரையோடு பாராளுமன்றம் இதற்கெனச் சட்டம் இயற்றலாம்.

3. புதிதாக ஒரு பகுதியை இந்திய மாநிலமாக சேர்க்கவும் (எ.கா. - சிக்கிம்) அல்லது புதிதாக ஒரு மாநிலத்தை ஏற்படுத்தவும் (எ.கா. - கோவா) யாருக்கு அதிகாரம் உண்டு?

பாராளுமன்றத்திற்குச் சட்டம் மூலமாக.

4. இந்தியாவில் எத்தனை மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் உள்ளன?

29 மாநிலங்களும், 7 யூனியன் பிரதேசங்களும் உள்ளன.

5. மொழி வாரியாக அமைக்கப்பட்ட முதல் மாநிலம் எது?

*ஆந்திரப் பிரதேசம் (1953).*

6. எந்த ஆண்டு மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன?

*1956.*

## பகுதி - 2

## குடியுரிமை (Citizenship)

(பிரிவுகள் 5-11)

1. இந்திய குடியுரிமையைப் பற்றி எந்தச் சட்டம் தெளிவுபடுத்துகிறது?

குடியுரிமைச் சட்டம், 1955.

2. இந்தியக் குடியுரிமையை எந்தெந்த வழிகளில் பெறலாம்?

பிறப்பு, வழிவழி வாரிசு (Descent), பதிவு (Registration), நீண்ட காலம் தங்கி இருந்து குடியுரிமை பெறுதல் (Naturalization), புதிதாகப் பகுதி இந்தியாவில் சேரும் பொழுது அப்பகுதியைச் சார்ந்தவர்கள் போன்ற வழிகளில் குடியுரிமை பெறலாம்.

இந்தியக் குடியுரிமை பெற்றவர்களின் குழந்தைகள் வெளிநாட்டில் பிறந்தாலும், வெளிநாட்டினரின் குழந்தைகள் இந்தியாவில் பிறந்தாலும் இந்தியக் குடியுரிமை பெறலாம்.

3. குடியுரிமை எந்தெந்த வழிகளில் அரசு ரத்து செய்யலாம்?

அயல்நாட்டின் குடியுரிமை பெற்றிருந்த காரணத்தால் இந்தியக் குடியுரிமை வேண்டாம் என்று ஒருவர் கூறினாலும், குடியுரிமையைத் தவறான வழிகளில் பெற்றிருந்தாலோ, இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு நம்பிக்கைத் துரோகம் பண்ணினாலோ, போர்க் காலங்களில் எதிரி நாட்டுடன் வியாபார உறவுகள் வைத்துக் கொண்டாலோ, குடியுரிமை பதிவு பண்ணிய ஐந்து ஆண்டுகளுக்குள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கு சிறைத் தண்டனை பெற்றாலோ, இந்தியக் குடிகள் இந்தியக்

குடியுரிமை வேண்டும் என்று கூறாமல் ஏழு ஆண்டுகள் இந்தியா விற்கு வெளியிலே தொடர்ந்து தங்கியிருந்தாலும் குடியுரிமையை ரத்து செய்யலாம்.

தன் விருப்பப்படியே பிற நாடுகளின் குடியுரிமை பெற்ற வர்கள் அரசியல் சட்டப்படி இந்தியக் குடிமகனாக இருக்க முடியாது.

4. இந்தியக் குடியுரிமையின் ஒரு சிறப்பு அம்சம் என்ன?

ஒரு சில நாடுகளில் மாநிலங்களுக்கெனத் தனிக் குடியுரிமை யும் நாடு முழுமைக்குமெனத் தனிக் குடியுரிமையும் இருக்கும் (Dual Citizenship). இந்தியாவில் ஒரே குடியுரிமை தான் உண்டு.

5. இந்தியக் குடியாக இருப்பவர்களுக்குண்டான சிறப்புச் சலுகைகள் என்ன?

குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், ஆளுநர்கள், உச்ச, உயர்நீதிமன்ற நீதிபதிகள் போன்ற பதவிகள் இந்தியக் குடிகளுக்கே உண்டு. பாராளுமன்ற மாநில அவை உறுப்பினர்கள் ஆவதற்கு இந்தியக் குடியாக இருக்க வேண்டும். சில அடிப்படை உரிமைகள் (எ.கா. பிரிவுகள் 15, 16, 19 போன்றன) இந்தியக் குடிகளுக்கு மட்டுமே உண்டு.

6. இந்திய வம்சா வழியினர் இந்தியாவிலும், ஒரு சில வெளி நாட்டிலும் ஒரே நேரத்தில் குடியுரிமை வைத்துக் கொள்ள வழிமுறை செய்துள்ள சட்டம் எது?

குடியுரிமைச் சட்டம் 2003.

# பகுதி - 3

# அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)

(பிரிவுகள் 12-35)

1. அடிப்படை உரிமைகள் என்பன யாவை? அதன் சிறப்புகள் யாவை?

சமுதாயத்தில் ஒரு தனிமனிதன் எல்லா வகையிலும் முழுமை யான வளர்ச்சி பெற சில அடிப்படை உரிமைகள் தேவை. இங்கிலாந்தின் மாக்ன கார்ட்டா (Magna Carta), அமெரிக்க அரசிய லமைப்புச் சட்டத்திலுள்ள உரிமைகள் மசோதா (Bill of Rights) இவைகளைக் கருத்தில் கொண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் கொண்டு வரப்பட்டன. முகப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ள உயரிய கருத்துக்களின் விளக்க வடிவமாகத் திகழ்கிறது அடிப்படை உரிமைகள் மற்றும் வழி நடத்தும் கொள்கைகளின் பகுதிகள், அடிப்படை உரிமை களுக்கு முரண்பட்ட நிலையில் உள்ள சட்டங்கள், சட்ட நிலை ஆணைகள் (Ordinances) ஒழுங்குமுறைகள், விதிகள், துணை விதிகள், அறிவிப்பு, உத்தரவு, பழக்க வழக்கங்கள் செல்லாதவை களாகக் கருதப்படும். சுதந்திரத்திற்கு முன் ஏற்பட்ட சட்டங் களிலும் அடிப்படை உரிமைகளுக்கு முரண்பட்ட நிலையில் உள்ள பகுதிகள் செல்லாதவைகளாகி விடும். அரசும் அரசு சார்ந்த நிறுவனங்களும் அடிப்படை உரிமைகளுக்கு முரண்பட்ட நிலை யில் உள்ள சட்டங்களை இயற்றாது. அடிப்படை உரிமைகள் ஜம்மு காஷ்மீர் உட்பட இந்தியா முழுமைக்கும் பொருந்தும்.

2. அடிப்படை உரிமைகளின் பொதுப்படையான பிரிவுகள் யாவை?

சமத்துவ உரிமைகள் (Right to Equality) (பிரிவுகள் 14-18), சுதந்திர உரிமைகள் (Right to Freedom) (பிரிவுகள் 19-22), சுரண்டல்களிலிருந்து பாதுகாப்பு (Right against Exploitation) (பிரிவுகள் 23-24), மதவழிபாடு உரிமை (பிரிவுகள் 25-28), கல்வி, பண்பாட்டு உரிமைகள் (பிரிவுகள் 29-30), அரசியலமைப்புத் தீர்வுகள் (Constitutional Remedies) (பிரிவுகள் 32-35) ஆகியன ஆகும்.

3. சமத்துவ உரிமைகளைப் (Equality) பற்றிய அடிப்படை உரிமைகள் யாவை?

சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்; சட்டத்தின் பாதுகாப்பு எல்லோருக்கும் சம அளவில் உண்டு. (பிரிவு 14). மதம், இனம் (Race), சாதி, ஆண், பெண் வேறுபாடு, பிறப்பிடம் இவைகளின் அடிப்படையில் அரசு நிர்வாகம் வேற்றுமை காண்பிக்காது. ஆனால் பெண்கள், குழந்தைகளுக்கு அரசு தனிச் சலுகை அளிக்கலாம். கடைகள், உண்டி, உறை நிலையங்கள், உணவகங்கள், பொழுது போக்கு இடங்கள் போன்ற பொதுவிடங்களில் சாதி வேறுபாடின்றி எல்லோருக்கும் சமஉரிமை உண்டு. கிணறுகள், குளங்கள், குளிக்கும் இடங்கள், சாலைகள், தங்கும் இடங்கள் போன்ற பொது இடங்களில் எல்லோருக்கும் சம உரிமை உண்டு. கல்வி ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பின் தங்கியுள்ள, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்காக அவர்கள் முன்னேற அரசு தனிச் சலுகைகள் கொடுப்பதைத் தடுக்க முடியாது. அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களிலோ அல்லது உதவி பெறாத தனியார் கல்வி நிறுவனங்களிலோ, பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட பழங் குடியினர் வகுப்பினரை அனுமதிக்கும் பொருட்டு தனி வழிமுறைகளை அரசு ஏற்படுத்தலாம். சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிலையங்களுக்கு இது பொருந்தாது. (பிரிவு-15) அரசின் வேலை பெறுவதற்கு எல்லோருக்கும் சம உரிமை உண்டு. மதம், இனம், சாதி, பாலினம், பாரம்பரியம், பிறப்பிடம், உறைவிடம் போன்றவற்றைக் காரணங் காட்டி ஒருவரை அரசு வேலைக்குத் தகுதியற்றவர் என்று கூறக் கூடாது. ஆனால் ஒரு மாநிலத்தில் அல்லது மத்திய ஆட்சிப் பகுதியில் வேலை பெறுவதற்கு, அந்தப் பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும் என்று அரசு குறிப்பிடலாம். மேற்கூறிய சமஉரிமை இருந்த போதிலும், அரசுப் பணிகளில் தகுந்த அளவு எண்ணிக்கையில் இல்லையென்ற காரணத்தின் அடிப்படையில் பின் தங்கிய, தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினருக்கு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யலாம். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினருக்கு பணிமூப்பு நிலையுடன் கூடிய பதவி உயர்வுக்குண்டான வழிமுறைகள் அரசு வகுக்கலாம். ஒரு ஆண்டில் ஐம்பது விழுக்காடுக்கு மேல் ஒதுக்கீடு கூடாது என்ற நிலையில் இந்த ஆண்டில் கொண்டு வரப்பட்ட பழைய காலியிடங்களின் எண்ணிகை இந்த ஐம்பது விழுக்காட்டில் சேர்க்கப்பட மாட்டாது. ஒரு மதம் அல்லது மதப் பிரிவைச் சார்ந்த ஒரு நிறுவனத்திற்கு அந்த மதத்தைச் சார்ந்தவர்களே நியமிக்க வேண்டுமென்றிருந்தால் அதற்குத் தடையில்லை (உ-ம்) இந்து அறநிலையத்துறை, வக்ப் முதலியன (பிரிவு 16). தீண்டாமை (Untouchability) ஒழிக்கப்பட்டு விட்டது. அது எந்த வடிவிலும் செயல்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. தீண்டாமையின் காரணமாகத் தகுதியின்மையாக்கல் நடவடிக்கை எதுவும் சட்டப்படி குற்றமாகும். (பிரிவு-17) அரசு பட்டங்கள் தருவது ஒழிக்கப்பட்டுள்ளது; ஆனால் தற்காப்புத் துறை மற்றும் கல்வித் துறையில் பட்டங்கள் கொடுப்பது தடை செய்யப்படவில்லை. அரசின் கீழ் நம்பகமான பொறுப்பையோ, ஊதியம் தரக் கூடிய பதவியையோ வகிக்கும் ஒருவர் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி எந்த அயல் நாட்டிலிருந்தும் அன்பளிப்பு, ஊதியம், பதவி ஏற்றுக் கொள்ளக் கூடாது (பிரிவு-18).



4. தீண்டாமை ஒழிப்பது தொடர்பான முக்கிய சட்டம் எது?

Protection of Civil Rights Act (PCRA) ஆகும். (1955ஆம் ஆண்டு)

5. இந்திரா சாஹ்னி வழக்கின் (மண்டல் வழக்கு) (AIR 1993 SC477) முக்கியத்துவம் என்ன?

மைய அரசில் பின் தங்கிய வகுப்பினருக்காக அரசு வேலைகளில் 27% ஒதுக்கீடு செய்வதை எதிர்த்து போடப்பட்ட வழக்காகும். ஒதுக்கீடு, அடிப்படையில் சரி என்று கூறிய நீதிமன்றம்,

முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த பொருளாதார நலிவுற்றவர்களுக்கு 10% ஒதுக்கப்பட்டது செல்லாது எனக் கூறியது. பிற்படுத்தப்பட்டோரிலும் ஏற்கனவே முன்னேறியவர்களுக்கு (Creamy Layer) இந்த ஒதுக்கீடு செல்லாது எனக் கூறியுள்ளது.

6. சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட அடிப்படை உரிமைகளில் சிலவற்றைக் குறிப்பிடுக.

பேச்சுரிமை, எழுத்துரிமை, ஆயுதமின்றி அமைதியாகக் கூடும் உரிமை, சங்கங்கள் அமைக்கும் உரிமை, இந்தியா முழுமைக்கும் சுதந்திரமாகத் திரிய, இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் வாழ, தங்க, தனக்குப் பிடித்த தொழிலைத் தொடர அடிப்படை உரிமைகள் உண்டு.

அதே நேரத்தில் இந்திய இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு, நாட்டின் பாதுகாப்பு, அயல் நாடுகளுடன் உண்டான நட்புறவு, பொது ஒழுங்கு, பண்பாடு, ஒழுக்கம், நீதிமன்ற அவமதிப்பு, பழங்குடியினர் நலங்காத்தல் போன்றவைகளின் மீது ஒன்றோ (அ) பலவின் காரணங்களால் அரசு நியாயமான கட்டுப்பாடுகளைச் சட்டங்கள் மூலமாக விதிக்கலாம்.

7. குற்றவியல் சம்பந்தமான அடிப்படை உரிமைகள் யாவை?

ஒரு குற்றம் நடக்கும் பொழுது அந்த நேரத்தில் அது சட்டத்திற்குப் புறம்பானதாக இருக்க வேண்டும். குற்றம் செய்த நேரத்தில் சட்டத்தில் உள்ள தண்டனையை விட அதிகத் தண்டனை, மாற்றியமைக்கப்பட்ட சட்டங்களினால் பழைய குற்றங்களுக்கு தண்டனை கொடுக்க முடியாது. ஒரே குற்றத்திற்கு இரண்டு முறை தண்டிக்க முடியாது. தனக்குப் புறம்பாகச் சாட்சி சொல்லுமாறு யாரையும் வற்புறுத்த முடியாது (பிரிவு-20).

8. கைது செய்யப்படுபவர்களின் அடிப்படை உரிமைகள் யாது?

யார் கைது செய்யப்பட்டாலும் அவர் கைது செய்யப்பட்ட காரணத்தை அவருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்கவோ, அமர்த்திக் கொள்ளவோ அதிகாரம் உண்டு. ஆனால் இந்த இரண்டு உரிமைகளும் நாட்டின்



எதிரிகளுக்கும் (Enemy Alien) தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்கும் (Preventive Detention) கிடையாது.

கைது செய்யப்பட்ட ஒருவர் 24 மணி நேரத்திற்குள் நீதிபதியின் முன்னால் கொண்டு வரப்பட வேண்டும். நீதிபதியின் உத்தரவின்படிதான் கைதை நீடிக்க முடியும்.

9. தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களின் உரிமைகள் யாது?

தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவரை மூன்று மாதங்கள் வரை காவலில் வைக்கலாம். அதற்குள் அவர் காவலை நீட்டிப்பது பற்றி உயர்நீதிமன்ற நீதிபதிக்கு இணையாக உள்ளவர்கள் இருக்கும் ஆலோசனைக் குழுமம் (Advisory Board) முடிவு எடுக்கும்.

10. எந்த அடிப்படை உரிமை, அடிப்படை உரிமைகளில் மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது?

ஒரு மனிதனின் உயிரையோ, சுதந்திரத்தையோ சட்டத்திற்குப் புறம்பான வழியில் பறிக்க முடியாது எனக் கூறும் பிரிவு - 21 தான்.

11. பிரிவு 21இன் நிலை பற்றி உச்ச நீதிமன்றத்தின் பொதுவான கருத்து என்ன?

பிரிவு 21, உயிரைத் தாங்கிப் பிடித்துக் கொள்ளும் உரிமை (Animal Existence) மட்டும் கொண்டானதல்ல. முறையான வாழ்வுக்குண்டான உரிமையையும் உள்ளடக்கும். சுதந்திர உரிமையைப் பற்றிய விளக்கங்களும் பல்வேறு கூறுகளைக் (Facets) கொண்டதாக விளங்க வேண்டும்.

மேனகா காந்தி வழக்கு (பாஸ்போர்ட் நிறுத்தம் பற்றியது), ஒலேகா டெல்லிஸ் வழக்கு (வாழ்வதற்கு உரிமை பற்றியது), சுனில் பத்ரா வழக்கு (கொடுமைப்படுத்தப்படுவதற்கு எதிரானது) (Right Against Torture) போன்ற பல்வேறு வழக்குகளில் மனித உரிமைகளின் பல்வேறு நிலைக்களன்களில் பாதிக்கப்பட்டோருக்கு பிரிவு 21ன்படி உச்ச நீதிமன்றம் சாதகமாகத் தீர்ப்பளித்திருக்கிறது.

12. பிரிவு - 20 மற்றும் 21இன் மற்றொரு முக்கியத்துவம் என்ன?

அவசர நிலைப் பிரகடனத்தின் போதும், இந்த இரு உரிமைகளைப் பறிக்க இயலாது.

13. கல்வியைப் பற்றிய அடிப்படை உரிமை யாது?

ஆறு வயது முதல் பதினான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அரசு இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கும். இது 86ஆவது திருத்தத்தின்படி (2002ஆம் ஆண்டு) கொண்டு வரப்பட்டது (Article 21A).

14. சுரண்டலை (Exploitation)ப் பற்றிய உரிமைகளைக் கூறுக.

மனித உயிரினங்களை வாங்குவது, விற்பது, பிச்சையெடுப்பது மற்றும் இது போன்ற கட்டாயத் தொழிலில் (Forced labour) ஈடுபடுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் அல்லது சுரங்கங்களில் அல்லது அபாயகரமான தொழில்களில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஈடுபடுத்துவது சட்டத்திற்குப் புறம்பானதாகும்.

15. பொதுநலத்திற்காகக் கட்டாய சேவை செய்யுமாறு அரசு நிர்ப்பந்திக்கலாமா?

நிர்ப்பந்திக்கலாம். ஆனால் மதம், இனம், ஜாதி, வகுப்பு அடிப்படையில் வித்தியாசம் காட்டக் கூடாது.

16. மத விஷயங்களைப் பொறுத்த அடிப்படை உரிமைகள் யாது?

சட்ட ஒழுங்கு, ஒழுக்கம், ஆரோக்கியம் முதலிய வரையறைக் குட்பட்டு ஒவ்வொரு குடிமகனும் தன் மனச்சாட்சிப்படி எந்த மதத்தையும் பின்பற்றலாம்; அதைப் பரப்பலாம். அரசு ஒரு மதத்தின் பொருளாதார, அரசியல், நிதி சம்பந்தப்பட்ட ஆனால் மத சம்பந்தப்படாத செய்கைகளை ஒழுங்குபடுத்தலாம் (பிரிவு 25); மத சம்பந்தப்பட்ட சமூக சீர்திருத்தங்கள் செய்யலாம். இந்து மதம் சார்ந்த மத நிலையங்களை இந்து மதத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் திறந்து வைக்கலாம். ஒவ்வொரு மதப் பிரிவினரும் தங்களுக்கு வேண்டியவாறு மத சம்பந்தப்பட்ட நிலையங்களை



தாங்களாகவே நிர்வகித்துக் கொள்ளலாம்; சொத்துக்கள் வாங்கிக் கொள்ளலாம்; சட்டத்திற்குட்பட்டு அந்த சொத்தை நிர்வகித்துக் கொள்ளலாம். ஆனால் குறிப்பிட்ட மதத்துக்காகவோ அல்லது மதத்தின் ஒரு பிரிவுக்கோ வரி செலுத்துமாறு யாரையும் வற்புறுத்த முடியாது.

17. கல்வி நிலையங்களில் மதபோதனை உண்டா?

அரசு மற்றும் அரசின் முழு உதவி பெறும் பள்ளிகளில் மத போதனை செய்யக் கூடாது; ஆனால் ஓர் அறக்கட்டளை (Endowment) அல்லது பொறுப்பாண்மையின் கீழ் ஒரு நிறுவனம் மதபோதனை செய்வது அவசியமாகும் என்பதன் அடிப்படையில் இயங்கி வந்தால், அரசு நிதி உதவி பெற்றாலும் மத போதனை செய்வதில் தடையில்லை. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசு நிதியினால் நடத்தப்படும் பள்ளிகளில் மாணவர்களை மதவழிபாட்டிற்கோ மதபோதனைக்கோ (18 வயதிற்கு மேல் உள்ள மாணவர்கள்), அல்லது அவர்களுடைய காப்பாளர்கள் (மாணவர்கள் 18 வயதிற்குட்பட்டிருந்தால்) சம்மதமின்றி உட்படுத்தக் கூடாது.

18. பண்பாடு, கல்வி பற்றிய பொதுவான அடிப்படை உரிமைகள் யாது?

இந்தியா முழுமையிலோ அல்லது ஒரு பகுதியிலோ வாழும் இந்தியக் குடிமக்களுக்கு தங்களுடைய தனிப்பட்ட மொழி, எழுத்து வடிவம், பண்பாடு இவைகளைப் பாதுகாத்துக் கொள்ள உரிமை உண்டு. அரசு சார்ந்த அல்லது அரசு நிதி பெறுகிற கல்வி நிலையங்களில் மதம், இனம், சாதி, மொழி இவைகளின் அடிப்படையில் மட்டுமே இந்தியக் குடிமக்கள் எவருக்குமே அனுமதி மறுக்கக் கூடாது.

19. கல்வி நிலையங்கள் நடத்த சிறுபான்மையினருக்குள்ள உரிமை என்ன?

மத, மொழி சிறுபான்மையினர் அவர்களுக்கு வேண்டிய கல்வி நிலையங்களை ஆரம்பிக்க, நடத்த உரிமை உண்டு. அரசு நிதி உதவி அளிக்கும் பொழுது சிறுபான்மையினர் கல்வி நிலையங்களுக்கு பாரபட்சம் காட்டக் கூடாது. (பிரிவு - 30)

20. சொத்துரிமை அடிப்படை உரிமையா?

இல்லை. 1978க்குப் பிறகு (44ஆவது திருத்தப்படி) சொத்துரிமை ஒரு சட்ட உரிமை (Legal Right) மட்டுமே. அடிப்படை உரிமை ஆக இருக்கும் பொழுது வழக்குகளை உயர்நீதி மன்றம், உச்ச நீதி மன்றங்களுக்கு மட்டும் எடுத்துச் சொல்லலாம். தற்பொழுது கீழ்நீதி மன்றங்களுக்கும் எடுத்துச் செல்லலாம். அடிப்படை உரிமையாக இருக்கும் பொழுது அரசு கைப்பற்றும் நிலங்களுக்கு மார்க்கெட் விலையில் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்தால் போதும்.

21. பிரிவு 32ன்படி உச்ச நீதிமன்றம் மூலமாக பெறக் கூடிய அரசியல் சட்டமைப்புத் தீர்வுகள் என்ன?

ஆட்கொணர்விக்கும் ஆணை (Habeas Corpus), செயலுறுத்தும் ஆணை (Mandamus), தடையுறுத்தும் ஆணை (Prohibition), தகுதி முறை வினவும் ஆணை (Quo Warranto) மற்றும் நெறிமுறை உணர்த்தும் ஆணை (Certiorari) ஆகும்.

22. அடிப்படை உரிமைகளை முழுமையாக அனுபவிக்கத் தடை உண்டா?

இராணுவம், பொது அமைதியையும் நிலை நாட்ட உதவும் காவல் துறை, ஒற்றர் இலாகா (Intelligence Gathering Institutions) மேற்கண்ட துறைகளுக்கு உதவிடும் தகவல் தொடர்பு (Telecommunications) துறைகள் இவற்றில் வேலை செய்வோருக்கு அடிப்படை உரிமைகளைத் தடை செய்யவோ, முழுமையாக நீக்கம் செய்யவோ சட்டம் மூலம் செய்திடலாம். இராணுவச் சட்டம் அமலில் இருக்கும் இடங்களிலும் உரிமைகள் தடை செய்யப்படலாம். (பிரிவு 33, 34)

23. ஆட்கொணர்விக்கும் ஆணை (Habeas Corpus) என்றால் என்ன?

ஹேபிஸ் கார்பஸ் என்பதன் நேரடியான பொருள் ஆளை நேராகக் கொணர் என்பதாகும். சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஒரு நபரையோ, தவறான முறையில் அடைபட்டுக் கிடக்கும் ஒரு நபரையோ உச்ச நீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் முன் அவரைக் கொணர்ந்து அவர் சட்டத்திற்குப் புறம்பாக அடைக்கப் பட்டுள்ளாரா என்று அறிய உதவிடும் ஆணை ஹேபியஸ் கார்பஸ் ஆகும்.



24. செயலுறுத்தும் ஆணை (Mandamus)யை விவரி.

Mandamus என்றால் ஆணையிடுதல் என்று பொருளாகும். அரசுத் துறையோ அல்லது அரசு சார்ந்த நிறுவனமோ சட்டத் துக்குப் புறம்பானதாகச் செயல்படுகிறது என்று நீதிமன்றத்தால் கருதப்பட்டால் சட்டத்திற்குட்பட்ட பணியைச் செய்யுமாறு ஆணையிடுதல் Mandamus ஆகும்.

25. தடையுறுத்தும் ஆணை (Prohibition) என்றால் என்ன?

ஒரு நீதிமன்றம் தனது வரையறைக்குட்படாத ஒரு வழக்கை விசாரித்தால் அந்த நீதிமன்றத்திற்கு மேலே உள்ள நீதிமன்றம் அந்த வழக்கிற்கு தடையிடும் ஆணைக்கு பெயர் தடையுறுத்தும் ஆணை (Prohibition) ஆகும்.

'Mandamus'இல் ஒரு செயலைச் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிடும்; 'Prohibition'இல் ஒரு செயலைச் செய்யாதிருக்குமாறு உத்தரவிடும்.

26. தகுதிமுறை வினவும் ஆணை (Quo Warranto) என்றால் என்ன?

ஒருவர் ஓர் அரசு அல்லது அரசு சார்ந்த அல்லது அரசு நிதி பெறும் நிறுவனத்தில் சட்டத்திற்கு புறம்பாக பணி நியமனம் செய்யப்பட்டிருந்தால் அவரை அந்த பணியைச் செய்யாதிருக்கக் கூறும் உத்தரவு Quo Wattanto ஆகும்.

27. நெறிமுறை உணர்த்தும் (Certiorari) ஆணை என்றால் என்ன?

ஒரு மேல் நீதிமன்றம் தனக்குக் கீழ்ப்பட்ட நீதிமன்றத்திற்கோ அல்லது அதற்கு இணையான அமைப்புக்கோ (Quasi Judicial) ஆணை பிறப்பிப்பது நெறிமுறை உணர்த்தும் ஆணை ஆகும்.

28. பொதுமக்கள் நலன் வழக்கு (Public Interest Litigation) என்றால் என்ன?

அரசோ, அரசைச் சார்ந்த நிறுவனங்களோ அல்லது வேறு எந்த அமைப்போ மக்கள் சம்பந்தமான கடமையிலிருந்து தவறி னால் அல்லது அரசியல் சட்டம் மற்ற சட்டங்களுக்குப் புறம்பாக நடந்தால் போதிய அளவு உரிமை உள்ள தனிப்பட்ட மனிதர் களோ அல்லது அமைப்புகளோ ஏழைகள், படிக்காதவர்கள், ஒடுக்கப் பட்டவர்கள், பொதுமக்கள் சார்பாக நீதிமன்றங்கள் மூலமாக வழக்குகள் தொடரலாம்; இவ்வழக்குகள் PIL என்றழைக்கப்படு கின்றன.

29. எந்த வருடத்திலிருந்து இவ்வகை வழக்குகள் பிரபலமாகத் தொடங்கின?

*1982*இல் நீதியரசர் பகவதி உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருக்கும் பொழுது ஓர் அஞ்சலட்டை மூலமாகவே குடிமக்கள் தரப்பிலிருந்து நியாயம் கோரியபோது உச்ச நீதிமன்றம் அதை ஒரு வழக்காக ஏற்றுக் கொண்டது.

30. தகவல் அறியும் உரிமைச் சட்டம் (The Right to Information Act) எந்த நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது?

*அக்டோபர் - 12, 2005.*

31. இந்தியக் குடியுரிமை பெறாதவர்களுக்கும் (non citizens) கிடைக்கக் கூடிய அடிப்படை உரிமைகளின் பிரிவுகள் யாவை?

பிரிவுகள் *14, 20-22, 23, 25* மற்றும் *32.*

32. பாரத ரத்னா, பத்ம விபூஷன், பத்மஸ்ரீ போன்ற பட்டங்களை அளிப்பதற்குத் தடை உண்டா?

இல்லை. இவைகள் பிரிவு *18*இன் கீழ் வரவில்லை என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# பகுதி - 4

## வழி நடத்தும் கொள்கைகள்
## (Directive Principles of State Policy)

(பிரிவுகள் 36-51)

1. வழி நடத்தும் கொள்கைகள் என்றால் என்ன?

மத்திய, மாநில அரசுகள் ஆட்சி நடத்தும் பொழுது கவனிக்கப்பட வேண்டிய கொள்கைகள் வழி நடத்தும் கொள்கைகளாகும். இவை பற்றிய விளக்கங்கள் பிரிவுகள் *36-51*இல் காணலாம்.

2. அடிப்படை உரிமைகளுக்கும் வழி நடத்தும் கொள்கை களுக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை?

அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் பொழுது அதை எதிர்த்து நீதிமன்றங்களுக்கு செல்லலாம். வழி நடத்தும் கொள்கை களைப் பின்பற்றவில்லை என்று அரசுகளுக்கு எதிராக நீதி மன்றம் செல்ல முடியாது.

அடிப்படை உரிமைகள் அரசியல் சம்பந்தமானவைகள்; வழி நடத்தும் கொள்கைகள் பொருளாதார சமுதாய முரண்பாடுகளை நீக்கத் தோன்றியவை. உண்மையான மக்கள் நலன் காக்கும் அரசு கருத்தில் கொள்ள வேண்டியவை வழி நடத்தும் கொள்கைகளாகும்.

3. வழி நடத்தும் கொள்கைகளில் முக்கியமானவற்றை விவரிக்கவும்.

a) எல்லாக் குடிமக்களுக்கும் ஓரளவு தன்னிறைவு பெற்ற வாழ்க்கையை அளித்தல்.

b) பொருளாதார ஏற்றத் தாழ்வைக் குறைத்தல்.

c) ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியான வேலைக்கு நிகரான ஊதியம் அளித்தல்.

d) இளைஞர்கள், குழந்தைகளைச் சுரண்டலில் இருந்து பாதுகாத்தல்; அவர்கள் நல்ல முறையில் வளரவும் வாழவும் நடவடிக்கை எடுத்தல்.

e) சம வாய்ப்பு அடிப்படையில் நீதியை மேம்படுத்தல்; ஏழைகளுக்கு இலவசச் சட்ட உதவி (Free legal Aid) அளித்தல்; தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை நிர்வாகத்தில் பங்களித்தல்.

f) ஊராட்சி மன்றங்களை ஏற்படுத்தி தகுந்த முறையில் அதிகாரம் பகிர்வளித்தல்.

g) படிப்பதற்கு, வேலை செய்வதற்கு, அடிப்படை உரிமை அளித்தல்; வேலை வாய்ப்பற்றோர், முதியோர், ஊனமுற்றோர் இவர்களுக்கு உதவுதல். நியாயமான, மனிதத் தன்மையுடன் கூடிய தொழில் முறை சூழ்நிலைகளை ஏற்படுத்துதல். மகப்பேறு நிவாரணம் அளித்தல். பல்வேறு வகையான தொழிலாளர்களுக்கு அடிப்படை ஊதியம், தேவையான ஓய்வு, சமூக மற்றும் பண்பாட்டுக்கான வாய்ப்புகள் கிடைக்குமாறு தகுந்த சட்டங்கள் நிறைவேற்றுதல். கிராமப்புறங்களில் தனிப்பட்ட முறையிலோ கூட்டுறவு முறையிலோ குடிசைத் தொழிலை வளர்த்தல்.

h) எல்லா மக்களுக்கும் ஒரே மாதிரியான உரிமையியல் சட்டங்கள் ஏற்படுத்துதல். வேளாண்மை, கால்நடை வளர்ப்பு ஆகியவைகளை அறிவியல் நவீன முறைப்படி செயல்படுத்தல். கால்நடைகள் கொல்லப்படுவதைத் தடுத்தல்.

i) 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டாய இலவசக் கல்வி அளித்தல்.

j) தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் மற்றும் நலிந்தோர்களுடைய கல்வி, பொருளாதாரத் திறன்களை வளர்த்தல். அவர்களை சமூக அநீதிகளிலிருந்தும் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாத்தல்.

k) காடு, வனவிலங்குகள் மற்றும் சுற்றுப்புறச் சூழல்களைப் பாதுகாத்தல்.



l) நீதித் துறையை அரசு நிர்வாகத்திலிருந்து பிரித்தல்.

m) மக்களுக்குத் தகுந்த சத்துணவு கிடைக்குமாறு செய்தல்; அதன் மூலம் தகுந்த ஆரோக்கியத்தை வளர்த்தல். போதைப் பொருட்கள் உபயோகிப்பதை தடை செய்தல். மது விலக்கை அமுல் படுத்துதல்.

n) ஞாபகச் சின்னங்கள் (Monuments) மற்றும் கலை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாத்தல்.

o) பன்னாட்டு அமைதி, பாதுகாப்புக்கு உதவுதல்.

# பகுதி - 4(அ)

## அடிப்படைக் கடமைகள் (Fundamental Duties)

(பிரிவு 51[அ])

1. இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள் எந்தத் திருத்தம் மூலமாக அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டு வரப்பட்டது?

*42அவது திருத்தம் மூலமாக 1976இல் கொண்டு வரப்பட்டது.*

2. அடிப்படைக் கடமைகளில் சிலவற்றைக் குறிப்பிடுக.

(a) அரசியலமைப்புச் சட்டம், அதன் உயரிய கொள்கைகள், அதைச் சார்ந்த நிறுவனங்கள், தேசியக் கொடி, தேசிய கீதம் முதலியவற்றிற்கு மதிப்பளித்தல்.

(b) இந்திய சுதந்திர போராட்டத்திற்குத் தூண்டுகோலாக விளங்கிய உயரிய கொள்கைகளை மதித்து நடத்தல்.

(c) இந்திய இறையாண்மையையும் (Sovereignty), ஒற்றுமையையும் (Unity), ஒருங்கிணைப்பையும் (Integrity) பாதுகாத்தல்.

(d) நாட்டைப் பாதுகாத்தலும், தேவைப்பட்ட நேரத்தில் நாட்டிற்குச் சேவை செய்தலும்.

(e) மதம், மொழி, பிராந்தியம் என்ற குறுகிய எல்லைகளைக் கடந்து எல்லாத் தரப்பு மக்களிடையே நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் வளர்த்தல். பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்தல். பெண்களின் கண்ணியத்திற்கு களங்கம் விளைவிக்கும் செயல்களை விட்டு விடுதல்.

(f) பாரம்பரியமிக்க ஒருங்கிணைந்த இந்தியப் பண்பாட்டை (Composite culture)ப் பாதுகாத்தல்.

(g) காடுகள், ஏரிகள், ஆறுகள், காட்டு விலங்கு, பறவையினங்கள் போன்றவைகளைத் தன்னகத்தே கொண்ட சுற்றுப்புறச் சூழல்களைப் பேணிப் பாதுகாத்தல்; உயிரினங்களிடம் அன்பு செலுத்துதல்.

(h) அறிவியல் சார்ந்த எண்ணங்கள் (Scientific Temper), மனித நேயம் (Humanity), தீராய்ந்து நோக்கும் பார்வை, சீர்திருத்த எண்ணங்கள் (Spirit of Inquiry and Reform) கொண்டிருத்தல்.

(i) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல். வன்முறைகள், தீவிர வாதங்களைக் கைவிடல். (Abjure Violence)

(j) தனிப்பட்ட மற்றும் பொதுச் செயல்களில் உயரிய நிலை (Excellence) அடைதல். இதன் மூலம் நாட்டின் செயல் திறனை அபரிமிதமாக வளர்த்தல்.

(k) பெற்றோர்கள் அல்லது காப்பாளர்கள் ஆறிலிருந்து பதினான்கு வயது வரை உள்ள தங்களது குழந்தைகளுக்குக் கல்வி அளித்தல்.

3. அடிப்படைக் கடமைகளைச் செய்யத் தவறுபவர்களைத் தண்டிக்க அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் உள்ளதா?

இல்லை.

# பகுதி - 5

## ஒன்றியம் (The Union)

(பிரிவுகள் 52-151)

### உட்பிரிவு - 1 (நிர்வாகம்)
### (பிரிவுகள் 52-78)

குடியரசுத் தலைவரும்
துணைக் குடியரசுத் தலைவரும்

1. முப்படைகளின் தலைமைத் தளபதி (Supreme Commander) யார்?

குடியரசுத் தலைவர்.

2. குடியரசுத் தலைவர் யாரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலுமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், மாநிலங்களின் சட்டசபையில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மூலமாகக் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். (குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது)

3. மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட புதுச்சேரி மற்றும் தில்லி சட்டசபை உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்களிக்க முடியுமா?

ஆம். 70ஆம் திருத்தப்படி (1992) வாக்களிக்க முடியும்.

4. குடியரசுத் தலைவரின் தேர்தல் முறையை சற்று விவரிக்கவும்.

பாராளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களின் மொத்த ஓட்டு மதிப்பும், மாநில சட்ட சபைகள் உறுப்பினர்களின் மொத்த ஒருங்கிணைந்த ஓட்டு மதிப்பும் சமம். மாநில உறுப்பினர்களின் வாக்குச் சீட்டின் மதிப்பு அந்தந்த மாநிலத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும், மக்கட் தொகையையும் பொறுத்து மாறுபடும் (Proportional Representation) ஒற்றை மாற்று வாக்குச் சீட்டு (Single Transferable vote) முறைப்படி தேர்தல் நடக்கும்.

5. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் யார்?

டாக்டர் இராஜேந்திர பிரசாத்.

6. இரண்டு முறை (10 ஆண்டுகள்) குடியரசுத் தலைவராகப் பதவி வகித்தவர் யார்?

டாக்டர் இராஜேந்திர பிரசாத். *(1952-1962)*

7. தத்துவக் குடியரசுத் தலைவர் (Philosopher President) என்றழைக்கப்படுபவர் யார்?

டாக்டர் இராதாகிருஷ்ணன் *(1962-67)*

8. குடியரசுத் தலைவரின் பதவிக் காலம் எவ்வளவு வருடம்?

ஐந்து வருடம். ஆனால் பதவிக் காலம் முடிந்த பின்னாலும் அடுத்து வரும் குடியரசுத் தலைவர் பதவியேற்கும் வரை அவர் பதவியில் தொடர வேண்டும்.

ஐந்தாண்டுகள் முடியும் முன்பே அடுத்த குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தி முடித்திருக்க வேண்டும்.

9. குடியரசுத் தலைவராகப் போட்டியிட ஒருவருக்கு வேண்டிய தகுதிகள் யாவை? வயது வரம்பு உள்ளதா?

இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். 35 வயது நிரம்பியவராகவும், மக்களவைக்கு தேர்ந்தெடுக்கத் தகுதி பெற்றவராகவும் இருக்க வேண்டும். அரசோ, அரசு சார்ந்த நிறுவனங்களிலோ ஊதியம் பெறக் கூடிய பதவி வகிக்கக் கூடாது. ஆனால் ஏற்கெனவே குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், ஆளுநர், மத்திய மாநில அமைச்சர் பதவி வகிப்பவராக இருந்தால் குடியரசுத் தலைவராகத் தடையில்லை. குடியரசு தலைவராவதற்கு உச்ச வயது வரம்பு இல்லை.



10. குடியரசுத் தலைவர் தன் பதவி விலகல் மடலை யாருக்கு அனுப்ப வேண்டும்?

துணைக் குடியரசுத் தலைவருக்கு. அவர் மக்களவைத் தலைவருக்கு (Speaker) இச் செய்தியை உடனடியாகத் தெரிவிப்பார்.

11. குடியரசுத் தலைவர் பதவியை ஒருவர் எத்தனை முறை வகிக்கலாம்?

எத்தனை முறை வேண்டுமானாலும் வகிக்கலாம். ஒருவர் குடியரசுத் தலைவர் ஆன பின்பு அவரது ஊதியம் மற்றும் படிகள் குறைக்கப்பட மாட்டாது.

12. குடியரசுத் தலைவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பவர் யார்?

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி; அவர் இல்லாத போது அவருக்கு அடுத்த மூத்த நீதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைப்பார். குடியரசுத் தலைவரான உடன் மத்திய மாநில அவைகளில் உறுப்பினராக இருந்தால் அந்த உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுவார்.

13. குடியரசுத் தலைவரின் நிர்வாக சம்பந்தமான (Executive or Administative) அதிகாரங்கள் எவை?

அரசு நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பாளராக இருப்பவர் குடியரசுத் தலைவர். நேரடியாகவோ அல்லது அவருக்குக் கீழ்ப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் மூலமாகவோ ஆட்சி நடத்துவார். மக்களவையின் பெரும்பான்மைக் கட்சித் தலைவரை பிரதம மந்திரியாக நியமிக்கிறார். பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்களை நியமிக்கிறார். ஆளுநர்கள், முதன்மைச் சட்ட அதிகாரி (Attorney General), தலைமை கணக்காயர் (CAG), உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் இரண்டிலும் உள்ள அனைத்து நீதியரசர்கள், தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும்

ஆணையர்கள், தூதுவர்கள் (Ambassadors or High Commissioners) ஆகியோரை நியமனம் செய்கிறார். மத்திய அரசில் எடுக்கப்படும் முடிவுகள் குடியரசுத் தலைவரின் பெயரால் எடுக்கப்படுகின்றன. முக்கிய ஒப்பந்தங்கள், வெளிநாடுகளுடன் உடன்படிக்கை, குடியரசுத் தலைவரின் பெயரால் செய்யப்படுகிறது.

14. பாதுகாப்புத் துறையைப் பொறுத்த வரையில் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் என்ன?

முப்படைகளின் தலைமைத் தளபதி குடியரசுத் தலைவர். மற்ற நாடுகளுடன் போர்ப் பிரகடனம் செய்வதோ அல்லது அமைதி ஒப்பந்தம் செய்வதோ குடியரசுத் தலைவரால் செய்யப் படுகிறது. முப்படைத் தளபதிகளை நியமிப்பதும் குடியரசுத் தலைவரே.

15. குடியரசுத் தலைவருக்கு பாராளுமன்றம் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் யாவை?

பாராளுமன்றம் என்பது குடியரசுத் தலைவர், மக்களவை, மேலவை என்ற மூன்றையும் உள்ளடக்கியது ஆகும். எனவே குடியரசுத் தலைவருக்கு பாராளுமன்றம் சம்பந்தமாக பரவலான அதிகாரங்கள் உண்டு. பாராளுமன்றத்தினால் ஒப்புதல் அளிக்கப் பட்ட மசோதாக்கள் அவரின் அனுமதி பெற்ற பின்பே சட்ட மாகும். பொதுத் தேர்தல் முடிந்து புதிதாக அமைக்கப்பட்ட அவையின் முதல் கூட்டத் தொடரிலும் ஒவ்வொரு ஆண்டு ஆரம்பத்திலும் பாராளுமன்ற இரு அவைகள் இணைந்த கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்துவார். இதைத் தவிர எந்த நேரத் திலும் பாராளுமன்ற அவைகளைக் கூட்டி அதில் உரையாற்ற குடியரசுத் தலைவருக்கு உரிமை உண்டு. அவருக்கு பாராளு மன்றத்தை எந்த நேரத்திலும் கூட்டவோ (Summon) காலவரை யறையின்றி ஒத்தி போடவோ (Prorogue) அல்லது மக்களவையைக் கலைக்கவோ (dissolution) உரிமையுண்டு. ஆறு மாத இடை வெளிக்குள் பாராளுமன்றக் கூட்டங்கள் நடக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இரு அவைகளின் இணக்கம் இல்லாததால் ஒரு மசோதா சட்டமாவதில் தடங்கல் ஏற்பட்டால் குடியரசுத் தலைவர் இரு அவைகள் இணைந்த கூட்டத்தை (Joint Sitting)



கூட்டலாம். மற்றும் பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் செய்திகள் (Messages) அனுப்பலாம்.

16. குடியரசுத் தலைவருக்கு நிதித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் எவை?

குடியரசுத் தலைவர் பெயரால் ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கை (Budget) பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. பண மசோதா அவரது அனுமதியுடன் தான் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. ஐந்தாண்டுக்கு ஒரு முறை குடியரசுத் தலைவர் நிதிக் குழுவை அமைக்கிறார். (பிரிவு 280) எதிர்பாராத செலவுகளுக்கு அவசர கால நிதியிலிருந்து பணம் எடுக்கக் குடியரசுத் தலைவர் அனுமதி வேண்டும்.

17. நீதித் துறை சம்பந்தப்பட்ட குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் (Dispensation of Justice) எவை?

பாதுகாப்புத் துறை நீதிமன்றங்கள் (Court Martial) அளித்த தீர்ப்பின்படி தண்டனை பெற்றவர்கள், பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களின் அடிப்படையில் தண்டனை பெற்றவர்கள் மற்றும் மரண தண்டனை பெற்றவர்கள் இவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு குடியரசுத் தலைவர் தண்டனையைக் குறைக்கலாம்.

ஒருவரின் தண்டனையை மன்னித்து, தண்டனையை முழுமையாக நீக்க முடியும் (Pardon). கடுமையான தண்டனைக்குப் பதிலாகத் தீவிரம் குறைந்த தண்டனையாக மாற்றலாம். (Commutation) (எ.கா. மரண தண்டனையை ஆயுள் தண்டனை யாக மாற்றலாம்). தண்டனையின் காலத்தைக் குறைக்கலாம் (Remission). தண்டனையை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒத்தி போடலாம் (Reprieve or suspend).

18. அவசர நிலையில் (Emergency) குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் எவை?

அமைச்சரவையின் எழுத்து பூர்வ ஒப்புதலுடன் அவசர நிலைப்பிரகடனம் செய்யலாம் (பிரிவு 352). ஒரு மாநிலத்தின் ஆட்சியை நேரடியாகத் தன் நிர்வாகத்துக் கீழ் கொண்டு வரலாம்.

19. குடியரசுத் தலைவரைப் பதவி நீக்கம் செய்ய முடியுமா?

அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டால் (Violation of the Constitution) அதற்காகக் குற்றம் சாட்டப்பட்டு (Impeachment) பாராளுமன்றத்தினால் நீக்கப்படலாம் (பிரிவு 56(I), Proviso(b))

20. பதவி நீக்கம் (Impeachment) செய்யும் முறை யாது?

பாராளுமன்றத்தின் இரு அவைகளில் ஏதாவதொரு அவை, குடியரசுத் தலைவர் அரசியல் சட்டத்திற்கு முரண்பாடாகச் செயல்படு கிறார் என்று குற்றம் சாட்டலாம். குற்றங்களை ஒரு தீர்மானம் மூலமாக (Resolution) பதினான்கு நாட்கள் வரையறை கொடுத்து அவையின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அவையில் தீர்மானம் கொண்டு வருவதற்கும் நான்கில் ஒரு பகுதி உறுப்பினர்களின் ஒப்புதல் தேவை.

ஓர் அவை முதலில் தீர்மானம் கொண்டு வந்தால், மற்ற அவை குற்றச்சாட்டை தானே விசாரிக்கும். அல்லது விசாரிக்கப் பட நடவடிக்கை எடுக்கும். குற்றச்சாட்டுகளை எதிர்த்து விசாரணையில் குடியரசுத் தலைவர் நேரடியாகவோ பிறர் மூல மாகவோ பதிலளிக்க உரிமை உண்டு. விசாரணைக்குப் பின்பு குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறது என இரண்டாவது அவை யிலும் மூன்றினுக்கு இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அந்நாளிலிருந்து குடியரசுத் தலைவர் பதவி இழந்ததாகக் கருதப்படுவார்.

21. துணைக் குடியரசுத் தலைவர் யாரால் தேர்ந்தெடுக்கப்படு கிறார்?

பாராளுமன்றத்தின் இரு அவை உறுப்பினர்களால் விகிதப் படியுள்ள (Proportional) ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி (Single Transferable Vote) தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

22. பாராளுமன்ற இரு அவை நியமன உறுப்பினர்கள் (Nominated members) வாக்களிக்க முடியுமா?

ஆம்.



23. துணைக் குடியரசுத் தலைவருக்குப் போட்டியிட வேண்டிய தகுதிகள் எவை?

இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். 35 வயது நிரம்பியவ ராக இருக்க வேண்டும். மேலவை (Council of States)க்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும். அரசு, அரசு சார்ந்த நிறுவனங்களில் ஊதியம் பெறுபவராக இருத்தல் கூடாது. குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், ஆளுநர்கள், மத்திய மாநில அமைச்சர் பதவிகள் ஊதியம் பெறும் பதவிகளாகக் கருதப்பட மாட்டாது. ஆனால் குடியரசுத் துணைத் தலைவர் பணியில் சேரும் பொழுது பாராளுமன்ற உறுப்பினர், மாநில அவைகள் உறுப்பினர் அல்லது மேலே கூறப்பட்ட மற்றப் பதவிகளிலிருந்து நீங்கியதாகக் கருதப்படுவார்.

24. துணைக் குடியரசுத் தலைவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பவர் யார்?

குடியரசுத் தலைவர்.

25. துணைக் குடியரசுத் தலைவரின் பதவிக் காலம் எவ்வளவு ஆண்டுகள்?

ஐந்து. ஆனாலும் பதவிக் காலம் முடிந்த பின்னரும் அடுத்த துணைக் குடியரசுத் தலைவர் பதவியேற்கும் வரை, பதவியில் தொடர வேண்டும்.

26. துணைக் குடியரசுத் தலைவரின் முக்கியமான பொறுப்பு யாது? அவரின் மற்றப் பொறுப்புகள் எவை?

தன் பதவியின் காரணமாக ராஜ்ய சபையின் தலைவராகச் செயல்படுவது முக்கியமான பொறுப்பு ஆகும். இதைத் தவிர திடீர் மறைவு, இராஜினாமா, பணி நீக்கம் போன்ற காரணங்களால் குடியரசுத் தலைவர் பதவி காலியாக இருந்தால், புதிதாக ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் வரை துணைக் குடியரசுத் தலைவர், குடியரசுத் தலைவராகச் செயல்படுவார். அதே மாதிரி குடியரசுத் தலைவர் நோய் மற்றும் விடுப்பு காரணங்களுக்காக தன் கடமை யைச் செய்ய இயலவில்லையென்றால் துணைக் குடியரசுத் தலைவர், அவ்வேலைகளைக் கவனிப்பார். துணைக் குடியரசுத்

தலைவர் குடியரசுத் தலைவராகச் செயல்படும் பொழுது அவருடைய அதிகாரங்கள், சிறப்புரிமைகள், ஊதியம் முதலியன குடியரசுத் தலைவருக்குண்டானது போன்று இருக்கும்.

27. ஒரே நேரத்தில் குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர் பதவி இடங்கள் காலியாகும் பொழுது குடியரசுத் தலைவரின் பொறுப்புகளை யார் கவனிப்பார்?

இந்தியத் தலைமை நீதிபதி (Chief Justice of India). 1969ஆம் வருடம் குடியரசுத் தலைவராக இருந்த ஜாகீர் உசேன் இறந்த பொழுது, துணைக் குடியரசுத் தலைவராக இருந்த வி.வி. கிரி குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட தன் பதவியை இராஜினாமா செய்தார். அவ்வமயம் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த நீதியரசர் இதயதுல்லா குடியரசுத் தலைவர் பொறுப்பைக் கவனித்துக் கொண்டார்.

28. துணைக் குடியரசுத் தலைவர் தனது வேலை விடுப்பு மடலை யாருக்கு அனுப்ப வேண்டும்?

குடியரசுத் தலைவருக்கு (பிரிவு 67(a))

29. துணைக் குடியரசுத் தலைவரைப் பதவி நீக்கம் செய்ய முடியுமா?

ஆம். குற்றச்சாட்டு மூலமாக பதினான்கு நாட்கள் அவகாசம் கொடுத்து குற்றச்சாட்டு தீர்மானம் கொண்டு வந்து மேலவையில் (Council of States) அவையின் அப்போதுள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். பின் மக்களவைக்குத் தீர்மானம் அனுப்பப்பட வேண்டும். மக்களவையிலும் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டால் துணைக் குடியரசுத் தலைவர் பதவி இழந்ததாகக் கருதப்படுவார் (பிரிவு 67(b))

30. துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல், குடியரசுத் தலைவர் தேர்தலிலிருந்து எவ்வாறு மாறுபட்டது?

மாநிலங்களிலுள்ள கீழவை உறுப்பினர்கள் வாக்களிக்க முடியாது.



பாராளுமன்ற இரு அவை நியமன உறுப்பினர்களும் (Nominated Members) வாக்களிக்கலாம்.

31. குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் தேர்தலை எதிர்த்து வழக்குகள் எங்கு தொடரலாம்?

உச்ச நீதிமன்றத்தில். ஆனால் வாக்காளர் குழுமத்தில் (Electoral College) காலியிடங்கள் இருந்ததால் தேர்தல் செல்லாது என்று நீதிமன்றத்துக்குச் செல்ல முடியாது.

32. குடியரசுத் தலைவர் துணைத் தலைவரின் மாத ஊதியம் எவ்வளவு?

குடியரசுத் தலைவரின் மாத ஊதியம் ரூ. 1,50,000. துணைத் தலைவரின் மாத ஊதியம் ரூ. 1,25,000.

33. மத்திய அரசின் நிர்வாக வரம்பு யாது?

எந்த விஷயங்களின் மீது பாராளுமன்றத்தால் சட்டம் இயற்ற இயலுமோ அந்த விஷயங்களின் மீதும், பன்னாட்டு ஒப்பந்தங்கள் அல்லது ஒப்புதல்கள் மீது மத்திய அரசு எடுக்க வேண்டிய செயல் முறைகள் மீதும், மத்திய அரசின் நிர்வாக வரம்பு பரவி நிற்கும் அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிட்டிருந்தாலோ அல்லது பாராளுமன்றம் சட்டம் இயற்றி இருந்தாலோ தவிர, மாநிலங்களுக்காக ஒதுக்கப்பட்ட விஷயத்தில் மத்திய அரசின் நிர்வாக வரம்பு தலையிடாது.

34. அரசியலமைப்புச் சட்டப்படி இந்தியக் குடியரசுத் தலைவரின் நிலை என்ன?

அமெரிக்க குடியரசுத் தலைவரைப் போலன்றி, இந்தியக் குடியரசுத் தலைவர் பெயரளவுக்குத்தான் தலைமைப் பொறுப்பில் உள்ளார். உண்மையான அதிகாரங்கள் பிரதம மந்திரியிடம்தான் உள்ளன. பிரிவு 53(1)ன்படி மத்திய அரசு நிர்வாகப் பொறுப்பின் தலைமையில் இருப்பவர் குடியரசுத் தலைவர். அதனால்தான் அவர் சர்வாதிகாரத்தோடு விளங்கலாமா எனக் கேள்வி எழுகிறது. ஆனால் பிரிவு 74(1)ன்படி அமைச்சரவையின் ஆலோசனைப்படிதான் நடக்க வேண்டும்.